1974 மார்ச் 18]

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, மணிமுத்தார் நகரியத்திற்கும், அம்பாசமுத்திரத்திற்கும் இடையே தாம்பரபரணி நதியின் குறுக்கே யுள்ள புதிய பாலத்தின் வழியாக பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) and (இ): திருநெல்வேலி பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகம் 14—11—1973 முதல் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து திருநெல்வேலி சந்திப்புவரை, அம்பா சமுத்திரம், மணிமுத்தார் ஆகிய இடங்களின் வழியாக பேருந்து ஒன்றை நடத்தி வருகிறது.

ஊத்துக்கோட்டை—அம்பத்தூர் பேருந்துப்பணி.

*490 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஊத்துக்கோட்டைக்கும், அம்பத்தூருக்கும் இடையே வெங்கல் வழியே பேருந்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அம்பத்தூர் தொழிற்பேட்டைக் கும் ஊத்துக்கோட்டைக்கும் இடையே புதிய வழித்தடம் ஒன்றை விடும் செயற்குறிப்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இவ்வழித்தடம் விடுவதற்கான போக்குவரத்துத் தகுதிகளை ஆராய்ந்து போதிய ஊர்திகள் கிடைக்கப்பெற்றபின் இப்புதிய வழித்தடம் தொடங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் அந்த ஊத்துக்கோட்டை கிராமத்திலிருந்து தொழிற்பேட்டை இருக் கும் அம்பத்தூருக்கு வருவதற்கு நேரடி பஸ் வசதி இல்லை, ஆகவே, விரைவாக, நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அந்தப் பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கனவே, நான் குறிப்பிட்டதைப்போல் பஸ்ஸீம் கிடைத்து, போக வர போக்குவரத்தும் போதுமான அளவுக்கு இருக்குமானல் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10·00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம். மானியக்கோரிக்கை எண் 18—மருத்துவம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்...........

(2) நடைமுறைக் கேள்வி

ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை மிரட்டிய தாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கு. காமாட்சி :—பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர்களே, கேள்வி நேரத்தின் போது இங்கே மாண்புமிகு முத்தையா அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு.........(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதற்கு அப்போதே முடிவு தெரிவித்து விட்டேன். உட்காருங்கள்.

திரு. கு. காமாட்சி :—இது மிகவும் முக்கியமான பிரச்சினை. அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டே போனால் நன்றாக இருக்காது. தாங்கள் அதற்கு அப்போது ரூலிங் கொடுக்கவில்லை. முத்தையா அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை, யாரையும் புண்படுத்தாத வண்ணம், அளித்து இருக்கிறார்கள். ஆனால் முன்னாள் துணை சபாநாயகர் மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் உடனே அந்தக் கேள்வி தன்னுடைய தலைவரை பாதிக்கும் என்று ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்பினார்கள். தாங்களும் அதற்குத் தீர்ப்பு அளித்து இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு நண்பர் முத்தையா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்பினார்கள். பக்கத்திலே இருக்கின்ற திரு சீனிவாசன் அவர்கள் "தன்னை மிரட்டுகிறார், ஊருக்கு வா பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிறார்கள்" என்று ஒழுங்குப் பிரச்னை இங்கே கிளப்பி இருக்கிறார்கள். அதற்குத் தாங்கள் எந்த விதமான ரூலிங்கும் தரவில்லை. இப்படியே ஒவ்வொரு உறுப்பினரும் பக்கத்திலே இருக்கிறவர்களைப் பார்த்து மிரட்டிக்கொண்டும், ஊருக்கு வா பார்த்துக்கொள்கிறேன் என்றும் சொல்லிக் கொண்டிருந்தால், அவையின் பெருமை பாதிக்கப்படும் என்று நான் கருதுகிறேன். மேலும், நண்பர் உறுப்பினர் அவர்கள் அரிசனங்களின் பிரதிநிதிகளாக இங்கேவந்து இருக்கிறார்கள். இங்கே இருக்கிற மற்ற உறுப்பினர்களையும் அது பாதிக்கக்கூடும். ஆகவே, அந்த மாதிரியான வார்த்தைகள் இங்கே சொல்லப்படுமானால் ஒருவருக்கொருவர் இங்கே அஞ்சத் தக்க அளவுக்கு நிலைமையேற்படும், ஊருக்குச் சென்றாலும் இதே நிலைமையேற்படும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே எங்களுக்கு இங்கேயும் பாதுகாப்பு அளித்து, ஊருக்கு சென்ற பிறகும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஏனெனில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் துணைச் சபாநாயகராக இருந்தவர்கள், மிகுந்த செல்வாக்குப் படைத்தவர்கள். இப்படி உறுப்பினர்கள் எல்லாம் இங்கே மிரட்டப்படுவார்களானால்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை விளக்குவதோடு நின்று விடுங்கள். அந்த பாயின்ட் ஆப் ஆர்டருக்கு பதில் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று சொன்னால், பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று பிறகுதான்